**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

**ந.க.எண்.4354/ஆ5/2024, நாள். 29.10.2024**

.....

பொருள் பள்ளிக் கல்வி – தீபாவளி பட்டாசு வெடிப்பதால் ஏற்படும் காற்று மற்றும் ஒலி மாசு பற்றிய விழிப்புணர்வு – மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவுக்கு இணங்குதல் – வழிமுறைகள் – சார்பு

பார்வை
1. Hon'ble Supreme Court of India Judgement Dated. 23.10.2018 in W.P.(C) No.728 of 2015
2. சென்னை – 6, பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.070848/எம்2/எஸ்1/2024, நாள். 28.10.2024

*****

பார்வை 2–ல் காணும் கடிதத்திற்கிணங்க, தீபாவளி பண்டிகையானது 31.10.2024 அன்று கொண்டாடப்படவுள்ளது. தீபாவளியின் போது புது ஆடைகள் அணிந்து இனிப்புகள் வழங்குவதுடன் வண்ண விளக்குகளுடன் பட்டாசுகளை வெடித்து மகிழ்ச்சியினை வெளிப்படுத்துவர்.

பட்டாசு வெடிப்பதால் ஒலி மற்றும் காற்று மாசு ஏற்படுகிறது. மேலும் மாண்புமிகு இந்திய உச்சநீதிமன்றம் 23.10.2018 நாளிட்ட தீர்ப்பில் மாசு அளவைக் குறைக்கும் மூலப்பொருளைப் பயன்படுத்தி பட்டாசுகளை உற்பத்தி செய்ய அறிவுறுத்தியது. மேலும் பசுமை பட்டாசுகளை உற்பத்தி செய்து விற்க அறிவுத்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு உச்சநீதிமன்றம் மேற்கண்ட உத்தரவில் பட்டாசுகளை வெடிப்பதால் ஏற்படும் காற்று / ஒலி மாசு குறித்து பொதுமக்களிடையே போதிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், குறிப்பிட்ட காலத்தில் பட்டாசு வெடிப்பதை ஊக்குவிக்கவும் அறிவுத்தியுள்ளது. மேற்கூறியவற்றின் அடிப்படையில் தீபாவளியன்று காலை 6.00 மணி முதல் 7.00 மணி வரையிலும், இரவு 7.00 மணி முதல் 8.00 மணி வரையிலும் பட்டாசுகளை வெடிக்க வேண்டும். பாதுகாப்பான மற்றும் மாசு இல்லாத தீபாவளியைக் கொண்டாடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**செய்ய வேண்டியவை –**

1. மாசு குறைந்த மற்றும் குறைந்த ஒலியை உருவாக்கும் பசுமை பட்டாசுகளை வெடிக்க வேண்டும்.
2. பொதுவான இடங்களில் மாவட்ட நிர்வாகத்தின் அனுமதியுடன் பட்டாசுகளை வெடிக்க வேண்டும்.

**செய்ய கூடாதவை –**

1. அதிக சத்தத்தை உருவாக்கும் பட்டாசுகளை வெடிப்பதைத் தவிர்க்கவும்.
2. மருத்துவமனைகள், பள்ளிகள், நீதிமன்றங்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் போன்ற அமைதியான இடங்களில் பட்டாசு வெடிப்பதைத் தவிர்க்கவும்.
3. குடிசைகள் மற்றும் தீ விபத்து ஏற்படும் பகுதிகளுக்கு அருகில் பட்டாசு வெடிப்பதை தவிர்க்கவும்.

சத்தமில்லாத, புகை இல்லாத, பாதுகாப்பான தீபாவளியை கொண்டாடும் பொருட்டு மாணவர்களுக்கு உரிய அறிவுரை வழங்குமாறு அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. மேலும் தீபாவளி பண்டிகைக்கான உறுதிமொழி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இணைப்பு – பார்வையின் கடித நகல்

29.10.24 29/10/24.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள், வேலூர் மாவட்டம்

நகல்–

1. பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு
   தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலைக் கல்வி / தனியார் பள்ளிகள் / தொடக்கக் கல்வி)
   வேலூர் மாவட்டம். (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு)
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படுகிறது.)